Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி: எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது பங்குனி 8 ஆம் நாள் துல்கஃதா 6 (21-3-64) சனிக்கிழமை இதழ் 40

உங்களுடைய அன்றாட பாவனைக்கு
திறம்
கே. ஆர். லிங்கன்ஸ்
காப்பித்தூள், மிளகாய்த்தூள்
புதிய முறையில் தயாரிக்கப்பெற்றது
யாழ்ப்பாணம் பஜார் ஏஜண்ட்
எம். பரராசசிங்கம்
சேலம் பீடி ஏஜண்ட்ஸ்,
யாழ்ப்பாணம்.

# மறைந்த பெரியாருக்கு பொதுமக்கள் அஞ்சலி

## அரசியல் தலைவர்கள், சமூக தொண்டர்கள் இறுதி மரியாதை

### பூதவுடல் தகனம்செய்யப்பட்டது

யாழ்ப்பாணம், சனி

கதிர்காமத்தில் சென்ற புதன்கிழமை இரவு கொலைகாரன் ஒருவனின் கத்திக்குப் பலியான சமூகத் தொண்டரும், சைவப்பெரியாரும், ஒய்வுபெற்ற மாவட்ட நீதிபதியுமான திரு. ஸ்பென்சர் ராஜரத்தினத்தின் பூதவுடல் நேற்று யாழ்ப்பாணம் செம்மணி மயானத்தில் சைவாசாரப்படி தகனம் செய்யப்பட்டது. மறைந்த பெரியாருக்கு சமயத் தொண்டர்களும் சமூக சேவையாளர்களும், அரசியல் தலைவர்களும் மற்றும் பொதுமக்கள் பலரும் தங்கள் இறுதி அஞ்சலியைத் தெரிவித்தனர்.

கதிர்காமத்திலிருந்துகொண்டுவரப்பட்டு பின்னர்கொழும்பு வாழ் மக்கள் தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்துவதற்கு வாய்ப்ப பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் பூதவுடல் நேற்று முன்தினம் மாலை வைக்கப்பட்டபின் நேற்று காலை பூதவுடல் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தது.

யாழ்ப்பாணம் வைமன் வீதியிலுள்ள அவரது வாசஸ்தலத்துக்குப் பூதவுடல்நேற்றுக்காலை சுமார் 9 மணியளவில்கொண்டு வரப்பட்டது. பூதவுடலுடன் அவரதுமைத்துனர் திரு.ஜி. ஜி. பொன்னம்பலமும் மற்றும் உறவினர்களும் நண்பர்களும் வந்திருந்தனர்.

வாசஸ்தலத்தில் பூதவுடல் வைக்கப்பட்டிருந்தபொழுது யாழ்ப்பாணம் நகரமேயர் திரு. டி. எஸ். துரைராசா, ஈழமுன்னணித் தலைவர் திரு. வி சுந்தரலிங்கம் மற்றும் அரசியல் கட்சிப் பிரமுகர்கள், சமூக ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், சமய ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் பலரும் மறைந்த பெரியாருக்கு தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

## யாழ். நீதிமன்றத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம், சனி

"திரு. ஸ்பென்சர் ராஜரத்தினம் ஒரு றமை மிக்க அத்துவக்காத்தாக இருந்தார். இவர் பின்னர் மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றிஇளைப்பாறினர். நீதிபதியாகக் கடமையாற்றியபோது வழக்கை விசாரணை செய்வதில் மிகவும் அவதானமாக இருப்பார். சமயத்துறையில் அவர் எவ்வளவு தூரம் ஈடுபாடு கொண்டிருந்தாரோ அவ்வளவு தூரம் நீதி செலுத்துவதிலும் அக்கறை கொண்டிருந்தார். யாழ்ப்பாண வழக்கறிஞர் சங்கம் உருவாக்கிய நீதிபதிகளுள் மிகத் திறமைவாய்ந்தவருள் திரு. ஸ்பென்சர் ராஜரத்தினம் ஒருவர்" என ஸ்பென்சர் ராஜரத்தினத்தின் பிரிவுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்

(6-ம் பக்கம் பார்க்க)

## தளபதி நானவதி விடுதலை

பம்பாய், மார்ச் 20

பம்பாய் வர்த்தகர் அஹூஜாவைக் கொலைசெய்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட இந்தியக் கடற்படைத் தளபதி கே. எம். நானவதி விடுதலை செய்யப்பட்டார்.

## திறைசேரி காரியதரிசி

மானிப்பாய், சனி

திறைசேரிக் காரியதரிசி திரு. எச். ஜினதாச சமரக்கொடி இன்று மாலை 6 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் சேமிப்பு விழாவை ஆரம்பித்து வைப்பார்.

## மின்சார விநியோகம் தடைப்பட்டது

காங்கேசன் துறை, வெள்ளி

காங்கேசன் துறையில் நேற்று மின்சார விநியோகம் தடைப்பட்டது.

சுன்னாகம் மின்சார நிலையத்திலிருந்து காங்கேசன் துறைக்கு வரும் மின்சாரக் கம்பிகளில் ஏற்பட்ட ஏதோ கோளாறு காரணமாகவே இவ்விதம் தடைப்பட்டதாக அறியப்படுகிறது.

நேற்று மின்சார விநியோகம் தடைபபட்டதால் இப்பகுதி மக்கள் பெரும் அவதிக்குள்ளானர்கள்.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி கோவில் 13-ம் திருவிழாவில் மாலை 6 மணி முதல் திரு. வி. கே. ஆறுமுகம் 'திருநாளைப் போவார்' என்னும் பொருள் பற்றிக் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

## இன்று நடைபெறும் தொழிற்சங்க ஊர்வலம்

### 10,000 தோட்டத் தொழிலாளர் கலந்துகொள்வார்கள்

கொழும்பு, வெள்ளி

நாளை காலிமுக மைதானத்தில் நடைபெறவிருக்கும் தொழிற்சங்க கூட்டத்திற்கான ஊர்வல ஏற்பாடுகளை பெரும்பாலான தொழிற் சங்கங்கள் மேற்கொண்டிருக்கின்றன. போட்டி தொழிற் சங்கங்கள் பெரிய ஊர்வலங்கள் நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளன. 10,000 தோட்டத் தொழிலாளர்கள் இதில் கலந்து கொள்வார்கள் எனத் தெரிகிறது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பாக சுமார் ஐயாயிரம் தொழிலாளர் கலந்து கொள்வார்கள் என திரு. தொண்டமான் நமது நிருபரிடம் கூறினர். ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. அஸீஸும் இதே அளவு தொழிலாளர் தமது ஸ்தாபனத்தின் சார்பாகக் கலந்து கொள்வார்கள் எனக் கூறினர்.

அமைதிக்குப் பங்கம் ஏற்படாதிருக்கும் பொருட்டு பொலிஸார் அதிகப்படியான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்துள்ளனர். போட்டி தொழிற்சங்கங்களிடையே கைகலப்பு ஏற்படாதிருக்கும் பொருட்டு கடேவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாய் பொலிஸார் தெரிவித்தனர்.

## "தகநாயக்காமீது குற்றச்சாட்டு சுமத்தப்படவில்லை"

—சொலிஸிட்டர் ஜெனரல்

கொழும்பு, வெள்ளி

திரு. தகநாயக்காவுக்கு எதிராக எவ்வித குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை என்றும், அவர் பண்டாரநாயக்காவின் கொலையில் சம்பந்தப்பட்டவர் என்பதை நிரூபிக்க சாட்சிகள் எவரும அழைக்கப் படமாட்டார்கள் என்றும், இன்றுகாலை பண்டாரநாயகா கொலை விசாரணைக் கமிஷன் விசாரணையின் போது சொலிஸிட்டர் ஜெனரல் திரு. ஏ ஸி அலெஸ் தெரிவித்தார். இன்றைய விசாரணையின்போது திரு. தகநாயக்கா சொலிஸிட்டர் ஜெனரலை குறுக்கு விசாரணை செய்தார்.

தகநாயக்காவின் கேள்விக்கு பதிலளிக்கையில், கமிஷனின் கடமைகளுடனுன சில விஷயங்களில் விளக்கம் கேட்பதற்காகவே திரு தகநாயக்காவை விசாரணைக்கு அழைத்ததாக திரு. அலெஸ் தெரிவித்தார்கடமைகள்பற்றித்தெரிவிக்கையில், பண்டாரநாயக்காவின் கொலையுடன் யாரும் நேரடியாக ஈடுபட்டிருந்ததார்களா. சம்பந்தம் பட்டிருந்தார்களா என்பது பற்றியும் கொலையில். சம்பந்தப் பட்டவர்களுடன் யாருக்கும் தொடர்பிருந்ததா என்பது பற்றியும் கண்டு பிடிக்கவே இக்கமிஷன் நியமிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

கமிஷனர்களுக்கு உதவும் பொருட்டு நியமிக்கப்பட்டவர் என்ற வகையில், கொலையில் ஈடுபட்டிருந்ததாக நிரூபிக்கப் பட்டுள்ள புத்தரகித்தவுடன், திரு. தகநாயக்கா நேரடியாகவோ, மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டிருந்தாரா என கண்டறிவதற்கு தான் முயற்சி செய்துள்ளதாகவும் திரு. அலெஸ் தெரிவித்தார்.

## கடிதம் அனுப்பியவருக்கு கமிஷன் தலைவர் எச்சரிக்கை

கொழும்பு, வெள்ளி

பண்டாரநாயக்கா கொலை விசாரணைக் கமிஷனுக்கு கடிதம் ஒன்று அனுப்பியிருந்த "வாலிப முன்னணி" என்ற சுதந்திரக் கட்சியின் பத்திரிகைக் காரியதரிசியான கருணபாலா என்பவரை கமிஷன் தலைவர் நீதியரசர் பொன்னுண்டோ எச்சரிக்கை செய்தார், "நாட்டில் இதுவரை நியமிக்கப்பட்ட கமிஷன்களில் பல, அவைமீது மக்கள் வைத்த நம்பிக்கையை தகர்த்தெறிந்துள்ளன. இபோதைய கொலை விசாரணைக் கமிஷனின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக மீண்டும் ஒரு கமிஷன் நியமிக்கப்படாமல் இருக்க வேண்டுமென நான் வேண்டிக் கொள்கி

(6-ம் பக்கம் பார்க்க)

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

மணிவாக்கு

அவரவருடைய இ... புகழை ...ந்து அவர வர்களுக்குப் பெ...ருந்துமாறு செய்யாவிட்டால் நலம் செய்வதிலும் தவறு உண் டாகும்.

— திருக்குறள்

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

பங்குனி 8 (21-3-64)

## சமயப் பெரியார்கள் கடமை

கருணை, இரக்கம் ஆகியவை மக்களின் உள்ளத்தில் ஊன்றத் தொடங்கினால் கொலைக்குற்றங்கள் நாட்டிலிருந்து ஒழிக்கப்பட்டுவிடலாம் என்று வண. ஹினட்டியான தம்மலோகதேரோ ஒரு வைபவத்தில் பேசுகையில் கூறியிருக்கிறார். நாடு நல்வழியில் செல்வதற்கு இளம் சந்ததியினருக்கு சமயத்தைப்போதிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். இன்று நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளனவென்பது மறுக்க முடியாத உண்மை. இதற்குப் பல காரணங்கள் கூறப்படலாமென்றாலும் இக்கால இளைஞர் மத்தியில் சமய பக்தி குன்றியிருப்பதும் இதனால் ஒழுக்கவின்மை ஏற்பட்டுள்ளதுமே முக்கிய காரணமெனக் கூறலாம். நாட்டில் பெருந்தொகையான இளைஞர்கள் வேலையின்றியுள்ளனர். வாழ்க்கைச் செலவோ அதிகம். இந்நிலையில் களவு, கொள்ளை போன்ற செயல்கள் அதிகரித்துள்ளன. வீதிகளில் பகலில்கூட தக்கபாதுகாப்பு இல்லாமல் பெண்கள் மட்டுமல்ல ஆண்களும்கூட சுதந்திரமாக நடமாட முடியாத நிலையேற்பட்டுள்ளது. வேலையற்ற இளைஞர்கள், தீயவர்களுடன் சகவாசம் கொள்ளவும் தீயபழக்கங்களுக்கு அடிமையாகவும் வாய்ப்பு ஏற்படுகிறது. கருணை, இரக்கம், அன்பு ஆகிய குணங்கள் மறைந்து விடுகின்றன.

எந்தமதமும் எவரையும் தீய வழியில் செல்லும்படி கூறவில்லை. எந்த மதத்தைச்சேர்ந்தவர்களாயினும் அந்தந்த மதத்தைச் சரியான முறையில் பின்பற்றினால் நாட்டில் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவும். எல்லா மதங்களும் அன்பையும் இரக்கத்தையும் கருணையையும்தான் கூறுகின்றன. ஆனால் இன்றுபலரும் பல்வித பிரச்னைகளிலும் ஈடுபட்டுக்கொண்டிருப்பதிலேயே காலத்தைச் செலவிடுகின்றனரேயொழிய வருங்கால சந்ததியினருடைய வாழ்க்கைக்கு சமய வாழ்க்கை அவசியமென்பதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. தம்மலோகதேரோ குறிப்பிட்டதுபோல் கருணை, இரக்கம் ஆகியவைகளை இளம் உள்ளங்களில் ஊன்றச் செய்தால் நாட்டில் கொலை முதலிய குற்றச்செயல்கள் இடம்பெற இடமிருக்காது. நாட்டினதும் வருங்கால சந்ததியினரதும் நலன்கருதி சமயப் பெரியார்கள் இவ்விஷயத்தில் வழிகாட்ட வேண்டும்.

# இலங்கைக்கு புகழ் தேடித்தந்த டி. எஸ்.

—சேர் அல்பர்ட் எப். பீரிஸ்—

**சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதம மந்திரியாகப் பதவி வகித்தவரும் தேசபிதாவென அழைக்கப்பட்டவருமான திரு. டி. எஸ் சேனநாயக்காவின் மறைவு தினம் நாளை அனுஷ்டிக்கப்படுகிறது.**

"விவசாயத்திலீடுபட்டுள்ள ஒரு விவசாயியை ஆட்சிபீடத்தில் அமர்த்திவிடு. அவன் ஆட்சிபெறத் தகுதிபெற்றுவிடுவான்" என இலங்கையின் முன்னாள் கவர்னர் கூறியதை இலங்கையின் தலைவர்கள் பலமுறை குறிப்பிட்டுள்ளனர். சேர் பொன்னம்பலம் அருணாசலம் இலங்கை மக்களை ஊககிவிப்பதற்காகவும் அதே நேரத்தில் இலங்கை மக்களிடம் பிரிட்டிஷார் ஆட்சியை ஒப்படைக்கவும் இந்த வாக்கியத்தை எடுத்துக் கூறினர்.

திரு. டி எஸ். சேனநாயகா இந்த வாக்கியத்திற்கு நல்லதொரு உதாரண புருஷராக விளங்கினர். அவர் ஒரு விவசாயி. தமது ஏரை எவ்வித திறமையுடன் பிடித்தாரோ அதே திறமையுடனும் நுட்பத்துடனும் நாட்டின் ஆட்சியையும் செலுத்தினர். உலகநாடுகளின் மத்தியில் இலங்கை புகழோடு இருப்பதற்கு அவரது உழைப்பு வழிவகுத்தது.

திரு. சேனநாயகா பிரிந்து 11 வருடங்கள் ஆகிவிட்டன. எமது இளம் சந்ததியினருக்கு அவரது சேவையின் முக்கிய விபரங்கள் தெரியாதிருக்கலாம், இவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிடுவது நன்மையளிக்குமென நம்பி சிலவற்றைக் குறிப்பிடவிரும்புகின்றேன்.

பிறருக்கு சேவை செய்ய வேண்டுமென்ற அவா அவரது நெஞ்சில் ஊறியதாலேயே அவர் உயர்தரக் கல்விபெறாது விட்டார் எனக் கூறலாம். அவரது ஆரம்பகாலக் கல்வி அவரை ஒரு சுதந்திர புருஷராக உருவாக்கியது.

இளம் வயதில் அவர் பெற்ற கல்வியும், கல்லூரிச் சூழ்நிலையும் அவரைப் பிற்காலத்தில் சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை கொண்ட திறமைமிக்க ஒரு தலைவராக்கியது.

தமது சொந்தச் சகோதரரான திரு. எப். ஆர். சேனநாயகா, சேர் பொன்னம்பலம் ராமநாதன், சேர் ஜேம்ஸ் பீரிஸ், சேர் பொன்னம்பலம் அருணாசலம், சேர். டி. பி. ஜெயதிலகா, திரு. ஈ. ஜே சமரவிக்ரமா ஆகிய சுதந்திர சிற்பிகளிடமிருந்து அரசியல் அனுபவம் பெறும் பாக்கியத்தை திரு. சேனநாயகா பெற்றிருந்தார்.

போலித்தனமற்ற நேர்மையான வாழ்வு வாழ்ந்த பெற்றோரின் புதல்வராக இருக்கவும் பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ள சகோதரர்களைக்கொண்டிருக்கவும் நல்லதொரு மனைவியைத் துணைவியாக்கவும் விசுவாசமுள்ள தேசாபிமானம் மிக்க பிள்ளைகளைப் பெற்றிருக்கவும் அவர் பாக்கியம் செய்திருந்தார்.

திரு. சேனநாயகாவுக்கு சகல சமூகத்தைச் சேர்ந்த, சகல சமயங்களையும் சேர்ந்த நண்பர்கள் இருந்தார்கள். இந்த நண்பர்கள் அவரை விரும்பினர்கள். அவரும் மிக்க விசுவாசமாக இருந்தார்.

### சேவைகள்

மதுவிலக்கு இயக்கத்தில் அவர் ஈடுபட்டார். பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தின்போது அபாயமான சூழ்நிலையில் சிறையிலிருந்தார். எமது தாய் நாட்டின் நலன் கருதி அவரை இறைவன் காப்பாற்றி வைத்தார். தம்மை விட வயது முதிர்ந்தவர்களுடனும் வயது குறைந்தவர்களுடனும் அவர் மரியாதையுடன் நடந்து கொண்டார். ஒரு தலைவருக்கு வேண்டிய திறமை, நுட்ப அறிவு எல்லாம் அவரிடம் இருந்ததால் அரசியல் விடுதலையில் மற்ற நாடுகள் பட்ட கஷ்டம் போல் இலங்கை அனுபவிக்கத் தேவையில்லாது போயிற்று.

### பாகுபாடு இல்லாதவர்

வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மத்திய பகுதி ஆகிய எல்லாப் பகுதிகளின் அபிவிருத்திக்கும் அவர் தன்னாலான முழுச் சேவையையும் செய்தார். இலங்கையில் வாழும் சகல பகுதி மக்களின் மகிழ்ச்சிக்கும் வளத்துக்கும் இன, மத பாகுபாடின்றி உழைத்தார் அவர்

அவரால் உருவாக்கப்பட்ட நில அபிவிருத்திச் சட்டம் வறுமையில் வாடியவர்களுக்கு நிவாரணமளிக்க வகை செய்தது. குடியேற்றத் திட்டங்கள் காணி இல்லாதவர்களுக்கு காணி கிடைக்க வழி அமைத்தது. நாட்டுக்கு எத்தனையோ வகையில் பணி புரிந்து வரும் கூட்டுறவு இயக்கம் அவரது முயற்சியால் உருவானதே. விவசாயத்துறையிலும் அவரது திட்டங்கள் நற்பலனளித்துள்ளன. அவரது பேராதரவுடன் கொண்டுவரப்பட்ட இலவசக் கல்வித்திட்டம் இன்னும் இதுபோன்ற நல்ல திட்டங்களெல்லாம் நாட்டு மக்களின் வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்தின.

'உண்மையான வீரர் மறைந்துவிட்டார்'. காலஞ்சென்ற மற்றொரு பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா திரு. சேனநாயக்காவின் பிரிவு குறித்துக் கூறிய சொற்கள் இவை.

நாட்டுப்பற்றுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இந்த தேசாபிமானியின் வாழ்க்கை நமது நாட்டு மக்கள் மனதில் நிலைக்கவேண்டும். அவருக்கு என்றும் நமது மரியாதையை சலுத்துவோமாக.

## பெரியார் மறைவு

சமூகத்தொண்டரும் சைவப் பெரியாருமான ஓய்வுபெற்ற மாவட்டநீதிபதி திரு. ஸ்பென்சர் ராஜரத்தினத்தின் திடீர் மறைவு இலங்கைவாழ் சைவப் பெருமக்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். நீதி பரிபாலன சேவையில் உயர்ந்த பதவி வகித்தபோதும், பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரும் எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்த பெரியார் ஈழத்தின் புனித க்ஷேத்திரமான கதிர்காமத்தில் கர்மயோகியைப் போல் துறவு வாழ்க்கை வாழ்ந்து வந்தசமயத்தில் காலன், ஒரு கொலைகாரன் உருவில் வந்து உயிரைக் கொண்டுசென்றுவிட்டான். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்வதைத் தவிர ஈழம்வாழ் தமிழ் மக்கள் வேறென்ன செய்யமுடியும். பொதுவாகத் தமிழ் மக்களுக்கும், குறிப்பாகச் சைவமக்களுக்கும் ஆத்மீகத் துறையிலும், சமூகத்துறையிலும் வழிகாட்டியாகவும் பாதுகாவலனாகவும் இன்னும் பல்லாண்டுகள் சேவை செய்ய வேண்டிய ஒரு சிறந்த பெரியாரை இறைவன் இவ்வளவு விரைவில் தம்மிடம் அழைத்துக்கொள்வான் என யார்தான் எதிர்பார்த்திருக்கமுடியும்? தமிழ் மக்களுக்குச் சோதனை காலம் இன்னமும் நீங்கவில்லையென்பதற்கு அறிகுறியா இது?

ஆசிரியருக்கு கடிதக்ம்

## நல்லதல்ல!

தமிழ் ஊழியர்களைப் பலவந்தமாய் வெளியேற்றும் படலமும் இப்போது தொடங்கிவிட்டது. மன்னர் கச்சேரியில் வேலைசெய்யும ஊழியரும், அரசாங்க எழுதுவினைஞர் சங்கச் செயற்குழு உறுப்பினருமான திரு. க. கந்தசாமி என்பவருக்கும், கொழும்பு கச்சேரியைச் சேர்ந்த திரு. எஸ். முத்துலிங்கம் என்பவருக்கும் இன்னும் சிலருக்கும் கட்டாய ஓய்வுக்கான கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. சிங்களம் படிக்கவில்லை என்பதே கடிதத்தில் காரணமாய்க் காட்டப்பட்டுள்ளது. அதற்குத் தண்டனையாய் இவர்கள் இன்னும் மூன்று மாதத்தில் வேலையை இழக்கவேண்டுமாம். இது அரசாங்கத்தின் கட்டளை!

இவ்வித கெடுபிடிப் போக்கிலே போனல், உறவோ ஐக்கியமோ இந்நாட்டில் எவ்விதம் வளரும்—இது தமது நாடு தான் எனத் தமிழினத்தவர் எவ்வாறு சிந்திக்க இயலும்— என ஆளும் கட்சியினரிடம் கேட்க விரும்புகின்றோம். இது நல்லதல்ல என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

மொழிப் பிரச்சினையைத் தீர்க்க முயற்சியெடுக்கிறோம், வட்டமேசை மகாநாடு கூடுகிறோம் என ஒருபுறம் கூறிக்கொண்டு மறுபுறமோ தமிழ்பேசும் ஊழியர்களைத் தீர்த்துக்கட்டும் முயற்சியில் அரசாங்கம் இவ்வேளையில் ஈடுபடுவது நல்லதல்ல.

சிங்களம் படிக்காவிடில் சம்பள உயர்வு நிறுத்தப்படும், பதவி உயர்வும் நடைபெறமாட்டாது, என்பதே முன்னர் அரசாங்கம் விடுத்துள்ள கட்டளை. இதற்கு இலக்காகியே எம் தமிழ் ஊழியர் பலர் வேலைசெய்துவந்தனர், மாதாந்தம், தம் சம்பள உயர்வுக்கான பணத்தை இழந்தும் வந்தனர். இப்போதோ முன்னறிவித்தல் எதுவுமின்றி வலுக்கட்டாய ஓய்வுக்கான எச்சரிக்கைப்பத்திரம் இவர்களுக்கு வழங்கப்படுவது அடாத்தானது; மிகமிக அநீதியானது. இதனை வாபஸ்பெறுக என அரசாங்கத்திடமும், ஆளும் கட்சியிடமும் வலியுறுத்திக் கூறுகின்றோம்.

க. பத்மநாதன்,
செயலாளர்,
சிங்களச் சட்டத்தால்
வேலை இழந்தோர் சங்கம்.
மன்னர்.

## தேசிய சுவீப் முடிவுகள்

கண்டி, வெள்ளி

நேற்று புஷ்பதான பாலிக மகாவித்தியாலய மண்டபத்தில் இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:—

முதற்பரிசு
02 O 0630 ரூபா 50,000
2-வது பரிசு
07 E 0741 ரூபா 15,000
3-வது பரிசு
03 M 0271 ரூபா 9,070

ரூபா 100 பரிசு பெறும் டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 14 J 0308 | 11 S 0589 |
| 03 H 0435 | 06 C 0739 |
| 08 H 0356 | 16 D 0578 |
| 04 J 0548 | 01 P 0450 |

(6-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

கதிர்காமத்திலே ஸ்பென்ஸர் ராஜரத்னமவர்கள் காலமான செய்தியை ரேடியோ மூலம் கேட்டதும் மிக வருந்தினேன். ஒரு நல்ல தமிழர், ஒரு நல்ல சைவர் மறைந்தது நாட்டுக்கே பெரிய நஷ்டமாகும்.

ஆனால் அவரை யாரோ ஒருவர் குத்திக் கொன்றுவிட்டதாகக் கேள்விப்பட்டதும், திடுக்கிட்டுப்போனேன். யார் அந்தப்பாவி; ஏன் அவரைக் குத்தினன் என்று பலரும் ஆத்திரமும் துக்கமும் கலந்து கேட்டனர்.

ஒரு சிங்களவராக இருக்குமோ என்று பயந்தேன். யாரோ ஒரு தமிழர் தான். புத்தி சுவாதீனமில்லாத நிலையில் குத்திவிட்டதாகக் கேள்விப்பட்டதும், ஒருவித ஆறுதலாக இருந்தது. ஒரு சிங்களவர் இதைச் செய்திருந்தால் எப்படி இருக்கும்? மகாத்மா காந்தியை ஒரு முஸ்லிம் சுட்டுக் கொன்றிருந்தால் என்ன ஆயிருக்கும்?

* * *

மாவட்ட நீதிபதியாகப் பல இடங்களிலே கடமையாற்றி, சிங்களவர் உள்ளிட்டு பலரது மதிப்பையும் அன்பையும் அமோகமாகப் பெற்றவரவர். அவரைப் பார்த்தால் பெரிய பதவியை வகித்தவரென்று யாரும் சொல்லமாட்டார்கள். அவ்வளவு எளிமை. சட்டை கூடப் போடுவதில்லை. சிவப் பொலிவுடன் கூடிய அவரது சிரித்த முகம் நம் கண்முன் அப்படியே காட்சியளிக்கின்றது.

* * *

ஒருசில மாதங்களிலே பாணந்துறையிலே கந்தசுவாமி கோயில் திருப்பணியை முடித்தவர் அவர். அங்குள்ள எல்லாச் சமூகத்தவரின் ஒத்துழைப்பையும் பெற்று அந்தப் பெரிய காரியத்தைச் சாதித்தார்.

1958-ம் வருடக் கலகத்திலே பாணந்துறையில் ஏற்பட்ட சம்பவங்களைக் கேட்டு அந்தப் பக்தரின் மனம் என்ன பாடு பட்டிருக்குமென்பதை விளக்கத் தேவையில்லை.

அதே சமயத்திலே அவர் கதிர்காமத்திலிருந்து செய்த அரும்பெருந் தொண்டைப் பற்றிப் பல அன்பர்கள் பாராட்டியதைக் கேள்விப்பட்டேன். அவர் அங்கு இருந்ததால் தான் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் காப்பாற்றப்பட்டதென்றும், பலர் உயிர் தப்பினரென்றும் ஓரன்பர் சொல்லிக் கண்கலங்கினர்.

அங்கு தெய்வானையம்மன் கோயிலிலே, பெரிய மடம் கட்டி, பல யாத்திரிகர்களுக்கும் மேலான வசதி செய்துள்ளதற்கு அந்த வீரர்தான் காரணம்.

கதிர்காமத்துக்குச் செல்லும் பல பக்தர்களுக்கும் அவர் செய்துள்ள அன்புப் பணி கொஞ்சமன்று.

உண்மையில் அவர் ஒரு துறவி. பற்றற்று தியாக சேவை செய்து வந்த அவரைப் போல் இன்னொருவரை எப்போது காணப்போகின்றோம். சோதனை மிக்க இச் சமயத்திலே ஏன் முருகன், இவ்வித உத்தம பக்தரை நம்மிடமிருந்து திடீரெனப் பறித்துத் தம்மிடம் அழைத்துக் கொண்டுவிட்டார்!

தந்தையார் தாயாருடன் பிறந்தார் தாரமார் புத்திரரார்
தாந்தாமாரே, வந்தவாறெங்ஙனே போமாறேதோ மாயமாமிதற்கேதும் மகிழவேண்டாம்,
சிந்தையீருமக்கொன்று சொல்லக் கேண்மின் திகழ்மதியும் வாளரவுந் திளைக்குஞ் சென்னி,
எந்தையார் திருநாமம் நமச்சிவாய என்றெழுவார்க் கிருவிசும்பிலிருக்கலாமே.

—திருநாவுக்கரசர்

காஷ்மீர் பிரச்னை

# அமெரிக்காவும் பிரிட்டனும் பாகிஸ்தானையே ஆதரிக்கின்றன

## இதன்மூலம் சீனவுடன் அமெரிக்கா ஒரே மேடைக்கு வந்துவிட்டது

### நேபாள பத்திரிகை அபிப்பிராயம்

காட்மாண்டு, மார்ச் 20

**"காஷ்மீர் பிரச்னையில் அமெரிக்காவும் பிரிட்டனும் பாகிஸ்தானையே ஆதரிக்கின்றன. இதன்மூலம் கம்யூனிஸ்ட் சீனவும் ஒரே மேடைக்கு வந்துவிட்டன" என்று நேபாள பத்திரிகையொன்று அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.**

நேபாளத்தின் தலைநகரமான காட்மாண்டிலிருந்து வெளியாகும் பிரபல பத்திரிகையொன்று இதுசம்பந்தமாக தனது தலையங்கத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"நீண்டகாலமாக நிலவிவரும் காஷ்மீர் பிரச்னையைச் சமாதானமாக, சுமுகமாகத் தீர்க்க வேண்டுமென்ற நோக்கம் பிரிட்டனுக்கோ அல்லது அமெரிக்காவுக்கோ சிறிதளவும் கிடையாது. காஷ்மீர் பிரச்னையில் தீர்வுகாண வேண்டுமென்பதை பிரிட்டனும் அமெரிக்காவும் மறுக்கின்றன. இதற்கு முக்கிய காரணம் இந்த இரு வல்லரசுநாடுகளும் பாகிஸ்தானை ஆதரிப்பதுதான்.

காஷ்மீர் பிரச்னையில் அமெரிக்காவும், பிரிட்டனும் பாகிஸ்தான்சார்பாகவே இருக்கின்றன. இந்தப் பிரச்னையில் பாகிஸ்தானை அமெரிக்கா ஆதரிப்பதன் மூலம் கம்யூனிஸ்ட் சீனவுடன் அமெரிக்காவும் ஒரேமேடையில்தான் காட்சியளிக்கின்றன. சீனவை அமெரிக்கா எதிர்க்கின்றபொழுதிலும் பாகிஸ்தானின் சார்பாக அமெரிக்கா இருப்பதால் பாக். தோழனை சீனவுடன்ஒரேமேடைக்கு அமெரிக்கா வந்துவிட்டது."

## ஜம்மு - காஷ்மீரில் வெடி சம்பவங்கள்

### இருவர் கைது

புதுடில்லி, மார்ச் 20

சில தினங்களுக்கு முன்னர் ஜம்மு காஷ்மீரில் நடைபெற்ற இரு வெடிகுண்டுச் சம்பவங்களில் பாகிஸ்தான் சம்பந்தப்பட்டிருப்பது சாத்தியமே என்று இலாகாவற்ற மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி நேற்று லோகசபையில் தெரிவித்தார்.

ஜம்முகாஷ்மீரில் நடைபெற்ற இரண்டு வெடிச் சம்பவங்களினால் உயிர்ச்சேதம் ஏற்படவில்லையென்றும் ஆனல் இந்திய துணைக் கமிஷனர் காரியாலயக் கட்டடமும் யன்னல்களும் சேதமடைந்தனவென்றும் லோகசபையில் அறிவிக்கப்பட்டது.

திரு. லால்பகதூர் சாஸ்திரி இதுசம்பந்தமாக மேலும் தெரிவிக்கையில்; ஜம்முக்காஷ்மீரில் கடந்த 14-ம் திகதி நடைபெற்ற வெடிச் சம்பவங்களில் பாகிஸ்தான் சம்பந்தப்பட்டிருப்பதை தம்மால் திட்டவட்டமாகக் கூறமுடியுமென்றும் இதுசம்பந்தமான தகவல்களை ராஜ்ய அரசாங்கம் கவனிக்கிறதென்றும், ராஜ்ய அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கம் சகல உதவிகளையும் அளிக்குமென்றும் கூறினர்.

"இச்சம்பவம் போர்நிறுத்தக் கோட்டிலிருந்து நான்கு மைலுக்குச் சமீபத்தில் நடைபெற்றுள்ளது. கணக்காயிலனரின் காரியாலயத்தின் கீழ் ஒரு வெடிகுண்டு கண்டெடுக்கப்பட்டது. அதை இராணுவ அதிகாரிகள் அகற்ற முன்னரே அது வெடித்துவிட்டது. இதனல் காரியாலயக் கட்டடமும், யன்னல்களும் சேதமுற்றன" என்றும் அறிவிக்கப்பட்டது.

இதுசம்பந்தமாக இருவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 7 பேர் மாண்டனர்

புதுடில்லி, மார்ச் 20

மத்திய பிரதேசத்தில் நேற்றுக் காலை ஏற்பட்ட கைகலப்பின் விளைவாக ஏழு பேர் மாண்டனர் என்றும் ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று மாலைக்குள் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## 37 இந்தியர்கள் கடத்தப்பட்டனர்

புதுடில்லி, மார்ச் 20

மேற்கு வங்காளத்திலிருந்து கடந்த வருடம் 37 இந்தியர்களை பாகிஸ்தானியர்கள் கடத்திச் சென்றனர் என்றும் பாகிஸ்தானியர்கள் சம்பந்தப்பட்ட 1,038 சம்பவங்கள் நடைபற்றிருக்கின்றன என்றும் 17 பாகிஸ்தானியர்கள் கொல்லப்பட்டனர் என்றும் மேற்கு வங்காள அரசாங்கம் அறிவித்துள்ள .

## டீன் ரஸ்க் ராஜினமா செய்வார்

### வெள்ளை மாளிகை காரியதரிசி ராஜினமா செய்துள்ளார்

வாஷிங்டன், மார்ச் 20

அமெரிக்க ராஜாங்க காரியதரிசி திரு. டீன்றஸ்க் தமது பதவியை ராஜினமாச் செய்வார் என்று வாஷிங்டனில் அதிகாரபூர்வமற்ற செய்தியொன்று கூறுகிறது.

இதுபற்றி அமெரிக்க அரசாங்க அதிகாரியொருவர் நேற்றுத் தெரிவிக்கையில், திரு. டீன்றஸ்க் அநேகமாக டிசம்பர் மாதம் தமது பதவியை ராஜினமா செய்யலாம், என்று கூறினர்.

நவம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலின் பின்னர் திரு. டீன்றஸ்க் ராஜினமா செய்வார் என்று நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வெள்ளை மாளிகையிலுள்ள காரியதரிசி ஒருவர் தமது பதவியை ராஜினமா செய்துள்ளார். செனட்சபைக்குப் போட்டியிடும் பொருட்டே இவர் ராஜினமா செய்துள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவரது ராஜினமா கடிதத்தை அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் ஜோன்ஸன் ஏற்றுக்கொண்டுள்ளார் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## சைப்பிரஸில் மீண்டும் சண்டை

### யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீறப்பட்டது

நிக்கோஸியா, மார்ச் 20

**நிக்கோஸியாவிலிருந்து மேற்கே முப்பது மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில் கடுமையான சண்டை நடைபெறுகிறதென்றும் அப்பகுதியில் சண்டை நிறுத்த ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

சைப்பிரஸுக்கு ஐக்கியநாடுகள் சமாதானப்படை அனுப்பப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட முதலாவது சண்டை இது என்று கூறப்படுகிறது.

நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டும் பொருட்டு கிரேக்க-துருக்கி பிரதிநிதிகளிடையே சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்கும் வகையில் அப்பகுதியில் சண்டை நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனல் ஒப்பந்தம் மீறப்பட்டு அங்கு இப்பொழுது சண்டை நடைபெறுகிறது.

ஆரம்பத்தில் ஒரு கிராமத்தில் தொடங்கிய சண்டை, தற்பொழுது சுற்றுப்புற பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறதென்றும் அங்கு நிலைமை திருப்திகரமாகவில்லையென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

துருக்கிப் பிரதமர் திரு. இஸ்மத்இனேனு இதுபற்றி நேற்றுத் தெரிவிக்கையில், சண்டை ஏற்பட்டுள்ள பகுதியில் சமாதானத்தை நிலைநாட்டுவது ஐக்கியநாடுகள் சமாதானப்படையின் கடமையென்றும் அக்கடமையினின்றும் தவறுவதாகவிருந்தால் சைப்பிரஸில் சமாதானப்படை இருப்பதில் பயனில்லையென்றும் கூறினர்.

சைப்பிரஸுக்கான ஐ. நா. சமாதானப்படையைச் சேர்ந்த கனடா துருப்புகள் 400 பேர் சைப்பிரஸுக்கு வந்துவிட்டனர். மிகுதியானவர்களைத் திரட்டும் முயற்சி நடைபெற்றுக் கொண்டுவருகிறது. கனடா துருப்புகள் எல்லோரும் இவ்வாரத்திற்குள் சைப்பிரஸ் வந்து சேர்ந்துவிடுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்க ஆயுத பரிகரண யோசனை

ஜெனிவா, மார்ச் 19

அமெரிக்காவின் பி. 47 விமானங்களையும், ரஷ்யாவின் டி. யு. 16 விமானங்களையும் சம எண்ணிக்கையில் கட்டம் கட்டமாக அழிக்கவேண்டும் என்ற யோசனையை அமெரிக்கப் பிரதிநிதி ஆயுத பரிகரண மகாநாட்டில் தெரிவித்தார். ஒவ்வொரு மாதமும் தலா 20 விமானங்கள் வீதம் இரண்டு வருடங்களுக்கு இவைகளை அழிக்கவேண்டும் என்றும், கூடுதல் வெடி விமானங்களையும் சம எண்ணிக்கையில் அழிக்க அமெரிக்கா தயாராய் இருக்கிறதென்றும் அவர் தெரிவித்தார்.

## தாக்கப்பட்டனர்!

### அகதிகளை பார்க்க சென்றபொழுது

ரூர்கேலா, மார்ச் 20

பாகிஸ்தானிலிருந்து வெளியேறிய அகதிகளைப் பார்க்கும்பொருட்டு கல்கத்தாவிலிருந்து தண்டகாருண்யம் நோக்கி ரயிலில் சென்றுகொண்டிருந்தவர்கள் சிலர், ரூர்கேலா ரயில் நிலையத்தில் வேறு ஒரு கோஷ்டியினரால் தாக்கப்பட்டதில் ஒருவர் மரணமானர் என்மர் காயமடைந்தனர். குறிப்பிட்ட கோஷ்டியினர் வேறு ஒரு ரயிலில் இங்கு வந்தனர் என்றும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அகதிகள் விவகாரம்

## கி. பாகிஸ்தான் மீது பர்மா பத்திரிகைகள் தாக்கு

ரங்கூன் மார்ச், 20

கிழக்குப் பாகிஸ்தானில் விளைவிக்கப்படும் கொடுமைக்கு அஞ்சி, அகதிகள் அங்கு திரும்பிச்செல்ல மறுக்கின்றார்கள் என்றும் கிழக்குப் பாகிஸ்தான் ஒரு 'நரகலோகம்' என்றும் பர்மா பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

"கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியா நோக்கிச் செல்லும் அகதிகள்பற்றி பர்மாவிலிருந்து வெளியாகும் ஐந்து தினசரிப் பத்திரிகைகள் கருத்து வெளியிட்டுள்ளன.

கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையைச் சமாளிக்கமுடியாத கிறிஸ்தவ, ஹிந்து அகதிகள் இந்தியா நோக்கிச் சென்றுள்ளனர். இதுவரை 35,000 கிறிஸ்தவ அகதிகள் இந்திய எல்லைக்குள் சென்று புகலிடம் கோரியுள்ளனர். கிழக்குப் பாகிஸ்தானில் கொடுமை தாங்கமுடியாமல்தான் அவர்கள் இந்தியா சென்றுள்ளனர்" என்று அப் பத்திரிகைகள் கருத்துத் தெரிவித்துள்ளன.

இந்தப் பத்திரிகைகள், கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வெளியேறிய அகதிகள் சம்பந்தமாக வெளியிட்ட செய்திகளுடன் புகைப்படங்களையும் பிரசுரித்துள்ளன.

கராச்சி, மார்ச் 20

பாகிஸ்தானில் நேர்முக தேர்தல் நடைபெறவேண்டுமென்று விடுக்கப்பட்ட கோரிக்கையை அதிபர் அயூப்கான் நிராகரித்துள்ளார்.

## சேலத்தில் சைக்கிள் தொழிற்சாலை

சென்னை, மார்ச் 20

சேலம் ஜில்லாவில் சைக்கிள் தொழிற்சாலை யொன்று நிறுவப்படவிருக்கின்றது. இத்தொழிற்சாலை ஆண்டு தோறும் ஐயாயிரம் சைக்கிள்களை உற்பத்தி செய்யும்.

## பிரதமர் குருஷ்சேவ் கெய்ரோ செல்வார்

கெய்ரோ, மார்ச் 20

சோவியத் பிரதமர் திரு. நிகிட்டா குருஷ்சேவ் மே மாதம் ஐக்கிய அரபுக்குடியரசுக்கு விஜயம் செய்வார் என்று இங்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபுக்குடியரசு அதிபர் திரு. நாஸரின் அழைப்பிற்கிணங்க இங்கு விஜயம் செய்யும் திரு. குருஷ்சேவ், அஸ்வான் அணைக்கட்டைச் சென்று பார்வையிடுவார்.

சோவியத் பிரதமர் குருஷ்சேவின் 70-வது பிறந்ததினம் அடுத்த மாதம் 17-ம் திகதியாகும். அநேகமாக திரு. குருஷ்சேவ் மே முதல் வாரத்தில் இங்கு விஜயம் செய்வார் எனத் தெரியவருகிறது.

## கோழிகளும் பேசுகின்றன!

பெர்லின், மார்ச் 20

கோழிகள், ஒன்றுடன் ஒன்று பேசிக்கொள்கின்றன என்றும் அவை பேசும் மொழி உலகத்திலுள்ள கோழிகள் அனைத்துக்கும் பொதுவானதென்றும் கோழிகள் சம்பந்தமாக பல காலமாக ஆராய்ச்சி நடத்திவரும் மேற்கு ஜெர்மன் டாக்டர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# எழுதுவினைஞர் சங்க செயற்குழு கூடுகின்றது

## 'கட்டாய ஓய்வு உத்தரவு பற்றி ஆலோசனை செய்யும்'

கொழும்பு, வெள்ளி

'கட்டாயஓய்வு உத்தரவு'பற்றியும் அதனால் எழுந்துள்ள நிலைமைபற்றியும் ஆராய்வதற்காக அரசாங்க எழுதுவினைஞர்சங்கச் செயற்குழு இம் மாதம் 22-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொள்ளுப்பிட்டியிலுள்ள தனது அலுவலகத்தில் கூடுகிறது.

**நால்வருக்கு உத்தரவு**

இதுவரை நான்கு தமிழ் உத்தியோகத்தர்களுக்குக் கட்டாயஓய்வு உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. மன்னார் கச்சேரியைச் சேர்ந்த கந்தசாமி என்பவருக்கும் மற்றும் கொழும்பு அலுவலகங்களில் பணி ஆற்றும் மற்றும் மூன்றுபேருக்கும் இந்த உத்தரவு வழங்கபட்டிருக்கிறது. சிங்களத் தேர்ச்சி பெறுவதற்கு இவர்கள் கொடுத்த காரணம் சரியாக இல்லாமையால் இவர்கள் சேவையில் இருந்து இளைப்பாறும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

**சங்க செயலாளர் அறிக்கை**

கட்டாய ஓய்வு உத்தரவு பற்றி அரசாங்க எழுதுவினைஞர் சங்கச் செயலாளர் திரு. பாலசுப்பிரமணியம் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

தமிழர் ஒழிப்பு அத்தியாவசியத்தின் கடைசிக் கட்டத்தில் தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்கள் பலியாகிக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் கவலைக்கிடமான தருணத்தில் சங்கம் என்ன செய்ய இருக்கிறது என்று உறுப்பினர்கள் வினவுகின்றனர் நாங்கள் அரசாங்கத்திடம் சென்று கட்டாயஓய்வுபற்றிய திறைசேரிச் சுற்றுநிருபத்தை வாபஸ்பெறக் கோர வேண்டுமென்று சிலர் கருதுகின்றனர் போலும். அரசாங்கத்திடம் முறையிட்டுப் பரிகாரம் பெறும்நிலை ஏற்கனவே கடந்துவிட்டது என்பதும் தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்களை ஒழித்துக் கட்டுவது ஒன்றையே நோக்கமாகக் கொண்டு நடந்துவரும் அரசாங்கத்திடம் மேற்கொண்டு முறையிடுவதால் எவ்வித பயனும் கிட்டாதென்பதும் எமது திடமான நம்பிக்கை. திரும்பத் திரும்ப அரசாங்கத்திடம் முறையிட்டுள்ளோம் என்பதையும் எம்மைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தின் நாகரிகமற்ற நடவடிக்கைகளே இது வரை கிடைத்த பலன் என்பதை எமது உறுப்பினர்கள் அறிய வேண்டும். இந்தக் கெடுபிடி நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம் விடுத்த சவாலைஏற்று எல்லாக் கோணங்களிலிருந்தும் அவற்றைத் தகர்க்கச்சங்கம் திடசங்கற்பம் செய்கிறது. அத்துடன் நாங்களும் உங்களை விரைவில் பின்பற்றுவோம். எமது நியாயமான மறுக்க முடியாத உரிமைகளை பெறுவதற்கும் சிங்கள ஆதிக்கத்தில் இருந்து தமிழ்பேசும் மக்களை மீட்பதற்கு வேண்டிய போராட்டத்தில் உங்களுடன் ஒன்றுபடுவோம் என்று இப்போது சேவையில் இருந்து கட்டாயமாக வெளியேற்றப்படும் எமது உறுப்பினர்களுக்குக் கூற விரும்புகிறோம். அவர்கள் தளர்ச்சியுறவோ வருத்தப்படவோ கூடாது. தமிழினத்தின் விடுதலை இயக்கத்தின் முதல் தியாகிகள் ஆவார்கள். அவர்கள் பெருமையே அடைய வேண்டும். வாழ்ந்தால் ஒன்றாக வாழ்வோம். தாழ்ந்தாலும் ஒன்றாகத் தாழ்வோம்.

## 10, 000 கடிதங்கள் விநியோகிக்கப்படவில்லை

கித்துல்கல, வெள்ளி

கித்துல்கல பகுதியில் வசிப்பவர்களுக்கென விலாசமிடப்பட்ட சுமார் 10,000 கடிதங்கள் சென்ற 6 நாட்களாக விநியோகிக்கப்படவில்லை என அறிவிக்கப்படுகிறது.

இ. போ. ச.வுக்கும் கித்துல்கல தபால்காரியாலய ஊழியருக்குமிடையிலேற்பட்டுள்ள தகராறு காரணமாகவே இவ்விதம் விநியோகிக்கப்படவில்லையெனத் தெரிகிறது.

சில நாட்களுக்கு முன் இ. போ. ச. பஸ் சாரதி ஒருவர் தபால் பைகளை இறக்குவதற்கு குறிப்பிட்ட தபால் காரியாலயத்திற்குமுன்பஸ்ஸை நிறுத்தாது 100 யார் தள்ளி நிறுத்தி அங்கிருந்த தபால் பைகளை இறக்குமாறு தபால் காரியாலய ஊழியருக்குக் கூறினார் என்றும் தபால் ஊழியர்கள் இறக்க மறுத்தார்கள் என்றும் இதனாலேயே இந்த நிலைமை தோன்றியுள்ளதாகவும் அறியப்படுகிறது.

## வீடு தீக்கிரை

உடுப்பிட்டி, வெள்ளி

பருத்தித்துறையைச் சேர்ந்த ஓடக்கரை என்னுமிடத்தில் வசிக்கும் கந்தசாமி சிவபாக்கியம் என்பவரின் வீடு கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தீப்பற்றி எரிந்துவிட்டது. யாரோ இனந்தெரியாதவர்களால் தீ வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கணவனை இழந்த இப்பெண் பெண்மணி தமக்கு நான்கு ஆண் குழந்தைகள் இருப்பதாகவும் தனது குடும்ப நிலை மிகவும் கஷ்டமாக இருப்பதாகவும் துணிமணிகளும், சில சாமான்வகைகளும் சாம்பராகிவிட்டனவென்றும் தெரிவித்தார்.

இச்சம்பவம் உடனடியாக அப்பகுதி கிராமசேவையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரூ. 10,000 பெறுமதியான துணி களவு

இரத்தினபுரி, வெள்ளி

இரத்தினபுரியிலுள்ள குறவிட்ட கொருளை பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்திலுள்ள துணி டிப்போவிலிருந்து ரூ 10,000 பெறுமதியான துணி களவாடப்படடுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. களவாடப்பட்ட துணிகளெல்லாம் பருத்தித் துணி வகைகளே எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுபான்மைத் தமிழருக்கு இடம்

### சமசமாஜ வாலிபர் மகாநாட்டுக்கு பிரேரணை

உடுப்பிட்டி, வெள்ளி

யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் வடபிரதேச சமசமாஜ வாலிபர் சங்க சம்மேளன மகாநாட்டில் கீழ்க்காணும் தீர்மானத்தைத் தாம் பிரேரிக்க விருப்பதாக வதிரி சமசமாஜ வாலிபர் கழகத் தலைவர் டாக்டர் எஸ். எஸ். மாசிலாமணி முன் அறிவித்தல் கொடுத்துள்ளார்.

தீர்மானம் பின்வருமாறு:-

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் சம்பந்தமாக வடபிரதேசத்தில் வாழும் சிறுபான்மைத்தமிழர் சமூகத்தின் மிகக் கூடுதலானோர் இலங்கை சமசமாஜக்கட்சியை ஆதரிக்கின்றனர். மிகக்குறைந்தவர்களே இதர அரசியல் கட்சிகளை ஆதரிக்கின்றனர். அதிலும் மிக அற்பமான சிறுபான்மைத் தமிழர் ஆதரவைப்பெறும் தமிழரசுக் கட்சியே சிறுபான்மைத் தமிழருக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கும்போது சிறுபான்மைத் தமிழரின் அமோக ஆதரவைப் பெற்றுக்கொண்டிருக்கும் சமசமாஜக்கட்சி சிறுபான்மைத் தமிழருக்குப் பிரதிநிதித்தும் கொடுக்கவுமில்லை. கொடுக்க நினைக்கவுமில்லை. எனவே இனிவரும் சந்தர்ப்பங்களிலாவது (செனட்டிலோ அல்லது பார்லிமெண்டிலோ) ஒரு பிரதிநிதித்துவம் சிறுபான்மைத் தமிழருக்கு வழங்கப்படல் வேண்டும்.

## போட்டியின்றி தெரிவு

மன்னார்குடி, மார்ச் 20

மன்னார்குடி நகரசபைத் தலைவர் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர் திரு. டி. பி. சிங்காரவேலு உடையார் மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தலைவர் தேர்தலில் திரு. சிங்காரவேலு உடையாரை யாரும் எதிர்த்துப் போட்டியிடவில்லை.

## தி. மு. க. ஆதரவாளர் தலைவரானார்

காஞ்சிபுரம், மார்ச் 20

காஞ்சிபுரம்நகரசபைத் தலைவராக திராவிட முன்னேற்றக் கழக ஆதரவு பெற்ற சுயேச்சை உறுப்பினர் திரு. ஏ. கே. தங்கவேலு முதலியார் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திருடர்கள் வாசல்பக்கத்தாலேயே கதவுகளை உடைத்து உள்ளே நுழைந்திருப்பதாகக் கூறப்படுகிறது. இதுசம்பந்தமாக இரத்தினபுரி பொலிஸார் புலன் விசாரணை நடத்தி வருகின்றனர்.


ஹார்லிக்ஸ் அளிக்கும் நன்மைக்கு ஒரு உதாரணம்:




ரஞ்சித் எங்களுக்கு ஒரே பிள்ளை. இதர சிறு பிள்ளைகளைப் போல சில சமயங்களில் சில்லறை குழப்படிகள் செய்தாலும் இப்படி கட்டுக்கடங்காமல் போனது கிடையாது. சமீப காலமாக அவன் அடிக்கடி சினக்க ஆரம்பித்தான். பசி குன்றி, தெம்பில்லாமல் வீட்டுக்குள்ளேயே வளைய வந்தான்.

ஒரு நாள் விருந்தினர்கள் எதிரில் ரஞ்சித் முரண்டு பிடித்தான். "இன்னொரு முறை குழப்படி செய்தால் ரஞ்சித்துக்கு உதை தான் கிடைக்கும்" என்று என் கணவர் இரைந்தார். எங்கள் வீட்டுக்கு வந்திருந்த சின்னம்மா சொன்னார்கள், "ரஞ்சித்தை உதைப்பது இருக்கட்டும், அவனை நான் பரிசோதித்துப் பார்க்கிறேன்." சின்னம்மா ஒரு டாக்டர்.




ரஞ்சித்தைப் பரிசோதித்து விட்டு சின்னம்மா சொன்னார்கள்; "ரஞ்சித்துக்கு ஒரு கோளாறுமில்லை; அவனுக்கு இது வேகமான வளர்ச்சிக்காலம், சக்தி பெரும் அளவில் தேவைப்படுகிறது. இழந்த சக்தி முழுவதும் மீட்கப்படாவிடில் சிறுவர்கள் சினக்கவும் சினப்பார்கள்; ரஞ்சித்துக்கு தினம் தவறாமல் ஹார்லிக்ஸ் கொடுத்து வாருங்கள். அவன் விரைவிலேயே சரியாகி விடுவான்."

ரஞ்சித்துக்கு தினந்தோறும் ஹார்லிக்ஸ் தொடர்ந்து அளித்து வந்தோம்.

சில வாரங்களுக்குள் ரஞ்சித் பழையபடி தெம்பும் சுறுசுறுப்புமாய் ஆகிவிட்டான். சினமும் குழப்படியும் இல்லை. அடியும் ஏச்சும் இல்லாமலேயே ரஞ்சித் திருந்திவிட்டான். சின்னம்மாவுக்கும் ஹார்லிக்ஸுக்கும் நாங்கள் கடமைப்பட்டிருக்கின்றோம் என்று சொல்லவும் வேண்டுமா!

**ஹார்லிக்ஸ் அதிக சக்தி யளிக்கிறது!**

# ஆங்கில பேச்சு போட்டிகளில் வேம்படிக்கு முதலிடம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடமாகாண ஆசிரியர் சங்க கல்வி குழு நடத்திய ஆங்கில பேச்சுப் போட்டிகளில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் மேற்பிரிவிலும் கீழ்ப்பிரிவிலும்முதலாம் இடத்தை பெற்றதோடு, கூட்டுப்பாடலிலும் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்கள். மேற்பிரிவில் மூன்றும் இடத்தையும் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி பெற்றுள்ளார்.

ஆண்களுக்கான ஆங்கில பேச்சுப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள், மேற்பிரிவில் இரண்டாம் மூன்றும் இடத்தையும், மத்திய பிரிவில் முதலாம் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்கள்.

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டிகளின் முடிவு பின்வருமாறு:

**கூட்டுப்பாடல்**

பெண்கள் மேற்பிரிவு: யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி, ஸ்கந்தவரோதயா, சிதம்பரா கல்லூரி.

**ஆங்கிலப் பேச்சு**

ஆண்கள் மேற்பிரிவு: என். பாலகுமார்— யாழ். மத்திய கல்லூரி, ஜே. தம்பாபிள்ளை — ஹாட்லி கல்லூரி, பி. ஸ்ரீரங்கன்—ஹாட்லி கல்லூரி.

ஆண்கள் மத்தியபிரிவு: ஈ. ராம்ராஜ்—ஹாட்லி கல்லூரி, சாந்தகுமார்—ஹாட்லி கல்லூரி ராஜாராம்— யாழ். மத்திய கல்லூரி.

ஆண்கள் கீழ்ப்பிரிவு: ஏ. சிவக்குமார்—சென். ஜோன்ஸ் கல்லூரி, ஜி. கே. ஜேசுராஜா—ஸ்கந்தவரோதயா கல்லூரி' எம். ஜெயராசா—வடமராட்சி இந்துகல்லூரி

**ஆங்கில பேச்சு**

பெண்கள் மேற்பிரிவு: டபிள்யூ. சுவெந்தினி— வேம்படி மகளிர் கல்லூரி, அங்கெல பொன்னே— பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, ஜெயகொரி—வேம்படி மகளிர் கல்லூரி.

பெண்கள் மத்தியபிரிவு: ஜே சாந்தினி— மகாஜன கல்லூரி, எஸ். யோகராணி— யூனியன் கல்லூரி, ஆர். நவரஞ்ஜினி—யாழ்ப்பாண கல்லூரி.

பெண்கள் கீழ்ப்பிரிவு:- ஏ. இந்திரா வசந்தி— வேம்படி மகளிர் கல்லூரி, எஸ. ஜெயகௌரி -யூனியன் கல்லூரி, பி. மோகினி வடமராட்சி இந்துக் கல்லூரி.

# இனம் 50 ரூபாய்

## கண்டுபிடித்துக் கொடுப்பவருக்கு

அளவெட்டி தெற்கே, ஒரு பையன் காணமற் போய்விட்டார். வாய் பேசத் தெரியாதவர், வயது 14, பெயர் செல்வராஜ், நிறம் சிவப்பு, உயரம் 4 அடி. இவரைப்பற்றி தகவல் கிட்டடி பொலிஸ் நிலையத்திற்கு அல்லது சொந்தக்காரருக்குத் தெரிவித்தால் ரூபா 50 கொடுக்கப்படும்.

சொந்தக்காரர் விலாசம்: M P. போல்ராஜ், 54, பேங் சால்வீதி, கொழும்பு 11.

# நடிகர் மனோகர் இங்கு வருகிறார்

யாழ்ப்பாணம், சனி

பிரபல தமிழ்த் திரைநடிகர் 'இலங்கேஸ்வரன்' மனோகர் விரைவில் யாழ்ப்பாணத்துக்கு வரவிருக்கிறார். தமது நாடகக் குழுவுடன் முன்னர் இலங்கைக்கு வந்து 'இலங்கேஸ்வரன்' போன்ற சிறந்த நாடகங்களை நடித்தவரும் 'இலங்கேஸ்வரன்' என்ற பட்டத்தை இங்கு பெற்றுச் சென்றவருமான நடிகர் மனோகர், யாழ்ப்பாணம் விளையாட்டு அரங்கு நிதிக்காக இங்கு கலைநிகழ்ச்சிகள் அளிப்பதற்காக வருகின்றார்.

அரசாங்க அறிவித்தல்

என் 493 22— யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் வதியும் வரியிறுப்போர்களுள் ஊழியத்தைப் பிரதான வருமான மூலமாக உள்ளவர்கள் தவிர மற்றைய அனைவரினதும் கோவைகள் யாழ்ப்பாணம் நல்லூர் குறுக்கு வீதி 6 ஆம் இலக்கத்திலுள்ள பிரதேச அலுவலகத்தில் கவனிக்கப்படுகின்றன. மேலே கூறப்பட்ட வரியிறுப்போர் வரி சம்பந்தமாகத் தாம் எழுதும் கடிதங்களை "வரி மதிப்பாளர், பிரதேச அலுவலகம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இல. 6, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

உள்நாட்டு இறைவரி ஆணையாளர்
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
கொழும்பு. 1595

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## கேள்விப் பத்திரம்

1. 1963-ம் ஆண்டின்போது ரோட்டுக்குக் கலகிரவி தார் ஊற்றுவதற்கு பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து 2-4-64 நண்பகல் 12 மணிவரை முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் பிரதியுடன் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. 31-3-64 நண்பகல் 12 மணிவரை கேள்விப்பத்திரப் பிணைப் பணமாக ரூபா ஐம்பதும் (ரூ. 50-00) கேள்விப்பத்திர விண்ணப்ப பத்திரத்துக்குரிய தொகையாக ரூபா ஐந்தும் (ரூ.5-00)செலுத்தி,மாநகரசபை மராமத்து என்ஜினியரிடமிருந்துகேள்விப்பத்திரவிண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திர விண்ணப்பத்திற்குரிய பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரர் வேலைஒப்பந்தம் செய்யப்பட்டபின் பிணைப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

3. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்விதாரர் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர். மாநகர சபை ஆணையாளர் அலுவலகத்தில் பந்தி (1) மேல் குறிப்பிட்ட திகதி, நேரத்தின்படி அவைகள் திறக்கப்படும்.

4. மேலும் விபரங்களை காரியாலய நேரத்தில் மாநகர சபை மராமத்து என்ஜினியரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(ஒப்பம்)
டி. டி. ஜெயசிங்கா,
மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை மண்டபம்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

# வரி விளம்பரம்

**நொய்வு, நீரிழிவு**

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றளைக் இனம். நொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50, வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்

உயர்ந்த தரம்! உன்னத மணம்! கம்ஸாஸ் செந்தாமரை பத்திகளை வாங்கிப் பாவியுங்கள். எங்கும் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர் நாதன் ஸ்ரோர்ஸ், 105, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 51

**தேவை**

சைக்கிள் பாட்ஸ் வியாபாரத்தில் ஐந்து வருட அனுபவமுள்ள ஒரு விற்பனையாளர் தேவை. நற்சாட்சிப்பத்திரத்துடனும், சேவையாண்டுப் பத்திரத்துடனும் நேரடியாகவோ அல்லது கடிதமூலமோ தொடர்புகொள்ளவும்.

நியூரோன் எலெக்ரிக்கல்ஸ், 228, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 56

**விற்பனைக்கு**

சித்தன்கேணிச் சந்திக்கு அருகாமையில் குடியிருக்கக் கூடிய நிலம் 6 1/2 பரப்பு தண்ணீருடன் விற்பனவுக்கிருக்கிறது. விலை ரூ. 20,000/_ அ. சுந்தரம் மூளாய். 52

கந்தாவளையில் மெயின் ரோட்டில் 11 ஏக்கர் நெல் காணி விற்பனவுக்கிருக்கிறது. விலை ரூபா 30,000/- அ. சுந்தரம், மூளாய். 53

**பெண்கள் இலவச விடுதி**

மகளிர் கலை, கைத்தொழில் மன்றம் மீண்டும் 225, பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தி, நல்லூரில் ஆரம்பிக்கப்படும். விடுதி, உணவு இலவசம். சேரவிரும்புபவர்கள் விண்ணப்பப்பத்திரத்திற்கு மனேஜருக்கு 25-3-64க்கு முன் விண்ணப்பிக்கவும். 60

**ரேடியோ**

வாங்கவோ, விற்கவோ பழுதுபார்க்கவோ, சிறந்த இடம்.

S. சுலைமான்கண்டு & பிரதர், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 55

**அரைச்சலார்**

அனேக மக்களின் ஆதரவு பெற்ற சுன்னாகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25-4-64 வரை அரைச்சலார். 62

# வட இலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் வட இலங்கைச் சங்கீதசபை நடத்திய 1963-ம் வருடப் பரீட்சையின் முடிவுகள் வருமாறு:—

## பரீட்சை ஸ்தானம்-யாழ்ப்பாணம்

முதலாம் பகுதி

**இரண்டாம் பிரிவு:**

வாய்ப்பாட்டு

கந்தசாமி கதிரேசு, சத்தியலேகா ஞானப்பிரகாசம், சந்திரலேகா ஞானப்பிரகாசம், வனிதாமணி சதாசிவம், யோகசந்திரன் சதாசிவம்.

**வீணை**

சாவித்திரியம்மாள் ஆத்மநாதசர்மா, கோமதியம்மாள் ஆத்மநாதசர்மா.

வயலின்

ராஜினி இராசரத்தினம்.

**சாதாரண பிரிவு:**

வயலின்

பாலமேகலா திருஞானசோதி, நாகேஸ்வரி தம்பியப்பா.

**வீணை**

தேவிகாமலர் நாகரத்தினம், மேரி ஜெயசீலி இந்திராணி சவரிமுத்து.

வாய்ப்பாட்டு

அனுசுயா தியாகராசா, பிரேமகுமாரி நடராசா, இந்திராணி விஸ்வலிங்கம், திலகவதி விஸ்வலிங்கம், புஷ்பராணி கனகரத்தினம், செல்வராணி நடராசா, யுகசொருபி இரத்தினசபாபதி, புஷ்பராணி சுப்பிரமணியம், ஞானமலர் கந்தையா, கைலாயவதியார் பொன்னுத்துரை, கமலேஸ்வரி அரசரத்தினம், கனகாம்பிகை சின்னத்துரை, கனகேஸ்வரி ஆறுமுகம், குகலட்சுமி குகராசா, சரஸ்வதி கந்தையா, சித்திராணி கிருஷ்ணசாமி சிவயோகி சபாரத்தினம், சுகுண வேலுப்பிள்ளை, துர்க்காதேவ பரமஸ்வரம், மாலதி சபாரத்தினம், வரதலட்சுமி துரைராசா, ரோகினி பரமேஸ்வரம். தவரஞ்சினி சின்னத்துரை, பூமணி குழந்தைவேலுப்பிள்ளை, பவளராணி நல்லதம்பி, இலான்ஜூலின் விமலாதேவி எட்வேட், செல்லபாக்கியம் செல்லையா.

(தொடரும்)

# வானொலிநிகழ்ச்சிகள்

## சனி 21-3-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-55 சைவநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கண்டதும் கேட்டதும் — செய்திச்சுருள்.

இரவு 7-00 பாட்டு — ஜி. பழனிவேல், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு — பொருளாதாரம் — எஸ். பாலகிருஷ்ணன், 9-30 வயலின் — எஸ். செல்லத்துரை, 10-00 நேயர்விருப்பம்.

## ஞாயிறு 22-3-64

காலை 6-45 பாமாலை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-00 பௌத்த போதனை, 8-15 தமிழ்மூலம் சிங்களம், 8-30 ஞானஞ்சலி, 9-00 முஸ்லிம் ஞாயிறு பாடசாலை, 9-30 கத்தோலிக்க நிகழ்ச்சி, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நெயர் விருப்பம், 1-00 மாதர் நிகழ்ச்சி

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-15 பாட்டு — சிரோன்மணி பொன்னுத்துரை, 5-45 திரை இசை, 6-15 தாளவாத்தியக்கச்சேரி மிருதங்கம் — என். தங்கம், கஞ்சிரா —ஏ. கணேசசர்மா, கடம்—வி. கணபதியாபிள்ளை

இரவு 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 மாதர் விருப்பம், 9-45 தேர்ந்த இசை, 10-00 நிலையஒலிப்பதிவு.

### திருச்சி

## சனி 21-3-64

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-30 இசைக்கோவை.

பகல் 1-00 பிள்ளைக்கனியமுது, 1-20 கதம்பம், 1-50 வாத்தியஇசை, 2-10 டி. கே. நாகரத்தினம்மாள் — புல்லாங்குழல்.

மாலை 5-15 திரைப்பட இசை, 5-45 வாத்தியஇசை, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கூண்டுக்கிளி | மாயாவி எழுதிய நாடகம்,8-00 டி. கே. நாகரத்னம்மாள் — புல்லாங்குழல், 8-40 தேசபக்திப்பாடல்கள், 9-30 அகில பாரத சங்கீதநிகழ்ச்சி — அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் — பாட்டு.

## ஞாயிறு 22-3-64

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-30 டி. பி. ராமதாஸ் — ஸொட்ராஜேஸாக்ஸ் போன், 8-15 எஸ். கல்யாணராமன் — பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி — கதம்பநிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்தியஇசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 கே. சரோஜா — பாட்டு.

மாலை 5-15 டி. பி. ராமதாஸ் — ஸொப்பராஜேஸாக்ஸபோன், 5-45 இசைபயிற்சி, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 முன்னேற்றப்பாதை — சித்திரம், 7-45 ராமநாதபுரம் வி. என். நாகராஜன் — பாட்டு, 8-45 ஸரோ , 9-15 தேசபக்திப் பாடல்கள், 9-45 இசைக்கதம்பம்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# "குருஷ்சேவை சந்திக்க தயார்"

ஹனோவர், மார்ச் 20

ஜெர்மனியின் ஐக்கியத்துக்கு வழிவகுக்கும் வாய்ப்பு ஏற்படுமானால். ரஷ்யப் பிரதமர் குருஷ்சேவைச் சந்தித்து அவருடன் பேச்சுக்கள் நடத்தத் தாம் தயாராகவிருப்பதாக மேற்கு ஜெர்மன் அதிபர் லூட்விக் எர்ஹாட் தெரிவித்துள்ளார்.




-லோன்

எஸ் - லொன்
இன்றைய அதிசயமான பைப்

இதுவே ஒரு உண்மையான பல-பயன் தரும் பைப்.... திண்மையானது கனக்குறைவானது, மலிவானது, கையாள்வது சுலபம், உக்காது கறையான் அண்டாது, அரிப்பேற்படாது, கிருமி, கறன், அழுக்குப்படல எதிர்ப்புடையது. எஸ்-லொன் மின்சார கொண்டுயிட் வேலை உட்பட பெரும்பாலான விட்டு, கைத்தொழில், விவசாய உபயோகத்திற்கு சிறந்த ஒப்பற்ற பைப்.

பைப் வேலை, உங்களுக்கு உண்டானால் அதற்கு உகந்த பைப் எஸ்லொன்தான் ஆகவே இன்றே எங்குமுள்ள சிறந்த ஸ்டோர்களில் அதைக் கேட்டு வாங்க நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்.
மகாராஜா கட்டிடம்.
பேங்ஷால் வீதி, கொழும்பு-11.

★ சென். ஜோன்ஸ்: 146
மத்தியகல்லூரி: 3-1
★ யாழ்.கல்லூரி: 72
பற்றிக்ஸ்: 19-4
★ ஹாட்லி: 196-7

# கல்லூரி கிரிக்கட் போட்டிகள்

யாழ்ப்பாணம், சனி.

வருணபகவானின் எச்சரிக்கையுடன் நேற்று ஆரம்பமான மூன்று கிரிக்கெட் போட்டிகளும், கிரிக்கெட் பிரியர்கள் எதிர்பார்த்ததற்கு எதிர்மாருக விறுவிறுப்புடன் நடைபெற்றன. கிரிக்கெட் வீரர்களின் துரிதமான ஆட்டத்தைக் கண்டு வருணபகவான் கூட, நேற்று கருமேகங்களுக்குள் மறைந்து விட்டான்! சென். ஜோன்ஸ் — மத்திய கல்லூரிக்கும், ஹாட்லி — யாழ். இந்துக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணக் கல்லூரி — சென். பற்றிக்ஸாக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகளின் முடிவுகள் வருமாறு.

## சென். ஜோன்ஸ்

சி. ஆனந்தகிருஷ்ணன்-11; டி. விபுலானந்தமூர்த்தி-05; எம். தெய்வேந்திரா-01; எஸ். எம். முத்ததம்பி-15; வி. சிவகுமார்-05; எஸ். சிவகுமார்-15; பி. கனகதுரை-39; வி. விவேகானந்தன்-15; ஜே. வைரவப்பிள்ளை-25; விபுலானந்தன்-09. யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ். ராஜதுரை 5 விக்கட்டுகளை வீழ்த்தினர். சென். ஜோன்ஸ் முதலாம் இன்னிங்ஸ்: 146 ஓட்டங்கள். யாழ். மத்திய கல்லூரி ஒரு விக்கட் நஷ்டத்துக்கு மூன்று ஓட்டங்கள் எடுத்தது.

## யாழ்ப்பாணக் கல்லூரி

ஏ. எச். ஷெரீவ்-06; ஹமீட் அலி-04; எஸ். பி. பரராஜசேகரம்-19; ஆர். ராஜகுலேந்திரன்-13; எம். விக்னேஸ்வரன்-08; வி. சச்சிதானந்தா-01; எஸ். மகேந்திரன்-12; ஆர். குகனேசன்-02; எம், பரமஸேவரன்-00; எஸ், சேதுபதி-00; எஸ். சண்முக-04.

யாழ்ப்பாணக்கல்லூரி முதல் இன்னிங்ஸ் 72. பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஏ. அன்ரன் 5 விக்கட்டுகளை வீழ்த்தியிருந்தார். பற்றிக்ஸ் கல்லூரியின் முதல் இன்னிங்ஸ் விபரம் வருமாறு:

எம். வெ. சந்தியாகோ-13; டி. பஸ்தியாம்பிள்ளை-00; எஸ் பி. இம்மானுவல்-00; ஏ. டி.சி. கிறவுதர்-00; எல். பி, பாக்கியநாயகம்-03. முதல் இன்னிங்ஸ் மொத்தம் 19.

யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். பரராஜசிங்கம் 3 விக்கட்டுகளை வீழ்த்தினர்.

## ஹாட்லிக் கல்லூரி

ஹாட்லிக் கல்லூரிக்கும் யாழ். இந்துக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற ஆட்டத்தில், ஹாட்லிக் கல்லூரி 7 விக்கட்டுகள் நஷ்டத்திற்கு 196ஓட்டங்கள் எடுத்திருந்தது. நடராஜாசுந்தரம் 61 ஓட்டங்கள் எடுத்திருந்தார். யாழ் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஜோதிலிங்கம் 3 விக்கட்டுகள் வீழ்த்தினர்'

மூன்று கிரிக்கெட் போட்டிகள் இன்று காலை 9 மணிக்கு மீண்டும் ஆரம்பமாகும்.

## சைவப்பிரமுகர் விஜயம்

யாழ்ப்பாணம், சனி

சென்னைச் சைவசித்தாந்த மகா சமாஜ மகாநாட்டுத் தலைவர் திரு. கா. இராமநதன் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளார். சைவப் புலவர் சங்கத்தினரும், சைவ பரிபாலன சபைச் சமயப்பிரசார அமைச்சரும், முன்னுள் வடமாநில உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரத்தின் இல்லத்தில் அவரைச் சந்தித்து சமயக் கருத்தரங்கமொன்றை நடாத்தினர்கள். திரு. இராமநாதன் இங்கு தங்கவிருக்கும் ஒருவார காலத்தில் பல பாடசாலைகளில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்.


கடைசி வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு)

சிவாஜி கணேசன் — விஜயகுமாரி
முத்துராமன் — சௌகார் ஜானகி
மற்றும் பலர் நடிக்கும்



பார் மகளே பார்

பணம், அந்தஸ்து, மதிப்பு இவைதான் வாழ்க்கையின் உயிர்நாடி என்று கருதும் ஜமீன்தாராக நடிகர்திலகமும் அவரது இரு புதல்விகளாக புஷ்பலதாவும் விஜயகுமாரியும் தோன்றுகிறார்கள்


## யாழ். நீதிமன்ற . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் பேசிய மாவட்ட நீதிபதி திரு சிவஞானசுந்தரம் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. சிவஞானசுந்தரம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

திரு. ஸ்பென்சர் ராஜரத்தினம் தாம் அதிக தொடர்பு கொண்டுள்ள இடத்திலும் தாம் எந்நேரமும் வணங்கிய தெய்வத்தின் சந்நிதானத்திலுமே உயிர்பிரிய விரும்பியிருப்பார்.

அவரது திடீர்மரணத்தினுல் நாமெல்லோரும் மிகக் கவலை கொண்டுள்ளோம். இந்தத் துயரமான சம்பவத்தையொட்டி அவரது குடும்பத்தினருடன் நாம் அனுதாபப் படுவதுடன் அவரது பிரிவைப் பெரும் இழப்பாக உணர்கின்றோம்.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. சோமதிலகம் பேசியதாவது:

வழக்கறிஞர் சங்கத்தைச் சேர்ந்த நாம் நீதிபதியவர்கள், தெரிவித்த துயரத்தில் கலந்துகொள்கின்றோம்.

திரு. ஸபென்சர் ராஜரத்தினம் திடீரென நம்மை விட்டுப் பிரிந்துவிட்டதால் ஒழுங்காக வார்த்தைகள் வரமறுக்கின்றன.

அவர் ஒரு அத்துவக்காத்து என்பதையும் திறமை வாய்ந்த நீதிபதி என்பதை நாம் அறிந்திருக்கிறோம் அவர் நல்ல இந்துவும் மனச்சாட்சிக்கு உண்மையாக நடந்துகொள்பவரும் என்பது பலர் அறிந்தது.

அவர் மரணமான விதம் நம்மைப் பெரிதும் அதிர்ச்சி கொள்ளச் செய்திருக்கிறது. சமயத்துறையில் ஈடுபட்டுள்ள சாதுவான குணம் படைத்த ஒருவருக்கு இவ்வித முடிவு வந்திருக்கக்கூடாது.

வைமன் வீதியிலிருந்து மாலை 3 மணிக்கு பிரேத ஊர்வலம் ஆரம்பமானது.

பிரேத ஊர்வலம், செம்மணி மயானத்தை 4-30 மணிக்கு அடைந்தது. எல்லோரும் இறுதி மரியாதை செலுத்தினர்கள். பிரேத ஊர்வலம், ஆரம்பமானது முதல் கடைசி வரை வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது.

## 4-ம் திருவிழா

காரைநகர், சனி

காரைநகர்-திண்ணபுரம் சிவன்கோவில் நான்காம் திருவிழா இன்று நடைபெறும். மாலை 7 மணி முதல் பலஇசை நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

## சுவீப்.. . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 20 K 0352 | 19 D 0451 |
| 06 D 0226 | 06 W 0916 |
| 18 U 0043 | 05 K0512 |
| 14 A 0340 | 22 O 0851 |
| 16 E 0644 | 10 L 0524 |
| 21 X 0185 | 06R 0432 |
| 07 V 0835 | 21 V 0037 |
| 05 S 0470 | 10 E 0603 |
| 01 V 0790 | 18 N 0376 |
| 02 A 0939 | 14 W 0625 |
| 20 B 0685 | 05 U 0079 |
| 12 N 0585 | 14 Y 0011 |
| 09 C 0792 | 08 X 0586 |
| 14 Z 0043 | 07 P 0784 |
| 03 M 0484 | 04 R 0326 |
| 19 F 0337 | 20 H 0427 |
| 15 K 0962 | 16 Q 0855 |
| 02 G 0612 | 13 H 0636 |
| 20 X 0328 | 13 Z 0757 |
| 10 K 0793 | 14 K 0850 |
| 07 O 0483 | 04 G 0539 |
| 06 B 0096 | 14 Y 0986 |
| 15 S 0043 | 07 P 0062 |
| 21 T 0383 | 05 A 0534 |
| 07 X 0891 | 19 Z 0128 |
| 15 R 0467 | 12 A 0483 |
| 21 B 0842 | 19 C 0702 |
| 09 L 0315 | 06 M 0477 |
| 07 K 0453 | 15 D 0915 |
| 01 L 0189 | 03 N 0162 |
| 03 V 0301 | 02 M 0307 |
| 03 M 0333 | 08 K 0563 |
| 15 D 0376 | 15 R 0029 |
| 12 K 0031 | 09 C 0010 |
| 21 U 0409 | 03 E 0879 |
| 21 X 0126 | 10 V 0940 |
| 05 O 0003 | 09 M 0938 |
| 11 G 0794 | 17 S 0726 |
| 18 P 0501 | 04 Q 0415 |
| 02 X 0937 | 20 N 0340 |
| 09 F 0203 | 10 U 0018 |
| 01 R 0372 | 04 U 0424 |
| 04 X 0626 | 03 H 0904 |
| 02 T 0086 | 05 B 0539 |
| 19 G 0714 | 19 A 0457 |
| 21 X 0718 | 01 P 0091 |

## திங்களன்று மகாநாடு

கொழும்பு, வெள்ளி

திங்கட்கிழமை காலை பத்து மணிக்கு ஜனப்பிரதிநிதிகள் சபை மண்டபத்தில் ஆரம்பமாகும் நடுநிலைமை நாடுகளின் தூதர்கள் மகாநாட்டில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகள் கொழும்பு நோக்கி வந்துகொண்டிருக்கின்றனர். ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் சகல பிரதிநிதிகளும் வந்து சேர்ந்துவிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நடுநிலைமை மகாநாட்டை இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆரம்பித்து வைத்து உரைநிகழ்த்துவார். மகாநாடு தினமும் காலையில்தான் கூடும். பிற்பகலில் பிரதிநிதிகள் ஆலோசனை நடத்துவார்கள்.

திங்கட்கிழமை ஆரம்பமாகவிருக்கும் மண்டலசார்பற்ற மகாநாடுகளின் தூதர்கள் மகாநாட்டுக்கான சகல ஏற்பாடுகளையும் அரசாங்கம் பூர்த்தி செய்து விட்டது. பங்குபற்றும் நாடுகளின் கொடிகள் பார்லிமெண்டுக்கு முன்னுல் பறக்கவிடப்படும்.

## கடிதம் அனுப் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி

றேன்" என்று திரு. கருணபாலா பண்டாரநாயக்கா கொலை விசாரணைக் கமிஷனுக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

திரு. கருணபாலாவை நீதியரசர் பெர்ணண்டோ விசாரணை செய்தார். விசாரணையின்போது, பிரஸ்தாப கருணபாலா பண்டாரநாயக்கா கொலை விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த போது சுப்ரீம் கோர்ட்டிற்கு கடிதம் எழுதியிருந்தார் என்றும், அதனுல் அவருக்குசுப்ரீம் கோர்ட்டு அவருககு 2 வருட கடுங்காவல் தண்டனை விதித்தது என்பதும் தெரிய வந்தது.

திரு. கருணபாலாவைப் பார்த்து நீதியரசர் பெர்ணன்டோ குறிப்பிடுகையில் "முன்னர் தபால் பியோனுகவும் குற்றவாளியாகவும் இருந்த நீர் உமதுஎண்ணப்படி பதவிவகிக்க முடியாது என்றே நாம் நினைக்கிறோம். வாலிப முன்னணி காரியதரிசியாக இருந்து கொண்டு அந்தஸ்தை பயன்படுத்தி உமது சொந்த விஷயங்களை சாதித்து வருகிறீர் என்பது புலனுகின்றது. நீர் முன்னர் செய்த குற்றம் ஒருபுறமிருக்க இப்பொழுது உம்மை முக்கிய மனிதராக நினைத்துவிட்டீர். உரிய தண்டனைக் காலத்தை அனுபவிக்காமல் எட்டுமாத சிறைவாசத்தின் பின்னர் விடுதலை செய்ததால் உம்மைப்பற்றி உமக்கு அதிக நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இது உமக்கு ஒரு பாடமாக இருக்கட்டும். இப்போதைக்கு விட்டுவிடுகிறோம்; உம்மீது எவ்வித நடவடிக்கை எடுப்பதென்பதை பின்னர் ஆலோசிப்போம்" என்றுர்.

விசாரணையின் போது தனக்கு மனநோய் எதுவும் இல்லையென்றும், தான் அங்கொடையில் சிகிச்சை பெறவில்லை என்றும் திரு. கருணபாலா தெரிவித்தார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.